செ.வெ.எண்: 62 நாள்: 31.07.2021

## குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் அரசு மான்யத்தில் வேளாண் இயந்திரங்கள் ஒதுக்கீடு

### நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகள் பயன்பெற மாவட்ட ஆட்சியர் அழைப்பு

தமிழக அரசு விவசாய பெருமக்களின் நலனுக்காக, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வேளாண்மையில் வேலையாட்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து குறித்த காலத்தில் பயிர் சாகுபடி செய்யவும், விவசாயிகளின் நிகர லாபத்தை உயர்த்திடவும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2021-22ம் ஆண்டு குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் அரசு மான்யத்தில் வழங்கப்பட உள்ளதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நடப்பு 2021-22- ஆம் நிதியாண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மான்ய விலையில் வழங்கப்பட உள்ளது.

இதன்படி அதிகபட்சமாக சிறிய நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரங்களுக்கு ரூ. 1.50 லட்சம், பெரிய நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரங்களுக்கு ரூ. 5.00 லட்சம், வைக்கோல் கட்டும் கருவிகளுக்கு ரூ.2.00 லட்சம், களையெடுக்கும் இயந்திரங்களுக்கு ரூ.35 ஆயிரம், கூட்டு நெல் அறுவடை இயந்திரங்களுக்கு ரூ.11.00 லட்சம் அரசு மான்யமாக வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறு, குறு, ஆதிதிராவிட மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவீத மான்யம், இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மான்யம் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மான்யம் பின்னேற்பு மான்யமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

தற்போது இத்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை மான்யத்தில் பெற்றிட ஏதுவாக பொதுப்பிரிவினருக்கு சிறிய நெல் நாற்று நடவு இயந்திரங்கள் 8 எண்கள், பெரிய நெல் நாற்று நடவு இயந்திரங்கள் 1 எண், வைக்கோல் கட்டும் கருவிகள் 6 எண்கள், களையெடுக்கும் இயந்திரங்கள் 5 எண்கள் மற்றும் கூட்டு நெல் அறுவடை இயந்திரங்கள் 5 எண்கள் என மொத்தம் 25 இயந்திரங்கள் ரூ.85.75 லட்சம் மான்யத்தில் வழங்கப்பட உள்ளது.

இதேபோல் சிறப்பு கூறு பிரிவினருக்கு சிறிய நெல் நாற்று நடவு இயந்திரங்கள் 2 எண்கள் வைக்கோல் கட்டும் கருவிகள் 3 எண்கள் என மொத்தம் கூடுதலாக 5 இயந்திரங்கள் ரூ.9.00.லட்சம் மான்யத்தில் வழங்கப்பட உள்ளது. இதன்படி நடப்பாண்டில் மொத்தம் ரூ.94.75 லட்சம் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

இத்திட்டத்தில் பயன் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் விண்ணப்பத்தை உழவன் செயலியில் பதிவு செய்து தொடர்ந்து மத்திய அரசின் இணையதளமான www.agrimachinery.nic.in மூலமாக பதிவு செய்து முதுரிமை அடிப்படையில் அரசு மான்யம் பெற்று பயன் பெறலாம் என நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**